Tamil

# இரசாயனப் பொருட்களை அகற்றுவதற்கான நேரமாகும் இது.

## இவற்றை நீங்கள் இலவசமாக விட்டுச் செல்லலாம்:



தோட்ட இரசாயனப் பொருட்கள்



நீச்சல் குள இரசாயனப் பொருட்கள்




வீட்டைத் தூய்மையாக்கும் பொருட்கள்



பொழுதுபோக்கு நடவடிக்கை இரசாயனப் பொருட்கள்



நச்சுப் பொருட்கள்




மின்கலன்கள்



வர்ணம்



மோட்டார் வாகன எண்ணைகள், திரவங்கள் மற்றும் எரிபொருட்கள்




ஒளிர் விளக்குகள்



எரிவாயுக் கலன்கள்



தீயணைப்பான்கள்



புகை எச்சரிக்கை மணிகள்

வர்ணங்களைத் தவிர, வீட்டு உபயோக அளவுகள் மட்டுமே ஏற்கப்படும் (20 லிட்டர்கள் அல்லது 20 கிலோ கிராம்கள்)
100 லிட்டர் வரைக்குமான வர்ணங்கள் ஏற்கப்படும் (20 லிட்டர் கலன்களில்).

**திகதிகள் மற்றும் ஸ்தலங்களுக்கு அடுத்த பக்கத்தினைப் பார்க்க.**

**மேலதிகத் தகவலுக்கு 'சுற்றுச்சூழல் இணைப்'பினை 131 555-இல் அழையுங்கள் அல்லது www.cleanout.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.**


**@NSWHouseholdProblemWastes**

NSW GOVERNMENT

Household Chemical CleanOut

paint back

## பின்வரும் சின்னங்கள் உள்ள பொருட்களையும் நீங்கள் விட்டுச் செல்லலாம்:




## உங்களுடைய கழிவுப் பொருட்களைப் பாதுகாப்பாக ஏற்றிச்செல்லல்

'க்ளீன்அவுட்' சேகரிப்பு மையம் ஒன்றிற்கு உங்களுடைய பொருட்களைப் பாதுகாப்பாக ஏற்றிச் செல்லவேண்டியது அவசியம். பாதுகாப்பான முறையில் பொருட்களை வைத்து அவற்றை ஏற்றிச் செல்வது எப்படி என்பதைப் பற்றிய சில முக்கியமான யோசனைக் குறிப்புகள் இங்கே தரப்பட்டுள்ளன:

- கொள்கலன்களில் தெளிவாகப் பெயர் உள்ள தாள்கள் ஒட்டப்பட்டு கலன்கள் இறுக மூடப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துங்கள். கொள்கலனில் உள்ள பொருள் என்ன என்று தெரியாவிட்டால், 'UNKNOWN CHEMICAL' ('இனம் அறியாத இரசாயனம்') என்று எழுதப்பட்ட தாள்களை கொள்கலன் மீது ஒட்டுங்கள்.
- சாத்தியமாகும் வேளைகளில் இரசாயனப் பொருட்களை அவை ஆரம்பத்தில் இருந்த கொள்கலன்களிலேயே வையுங்கள்.
- இரசாயனப் பொருட்களைக் கலப்பதால் ஆபத்தான எதிர்வினைகள் ஏற்படும் என்பதால் அப்படிச் செய்யாதீர்கள்.
- ஏற்றிச் செல்லும் வேளைகளில் திரவங்கள் கசியக்கூடும். பழைய அல்லது சேதமடைந்த கொள்கலன்களை செய்தித்தள்களில் சுற்றி அவற்றை உறுதியான பிளாஸ்ட்டிக் பையில் வைத்து பிறகு ஒரு பிளாஸ்ட்டிக் கலன் அல்லது தட்டில் வையுங்கள்.
- வீட்டு உபயோக இரசாயனப் பொருட்களைப் பயணிகளிடம் இருந்து தூர வையுங்கள், உதாரணமாக, வாகனத்தின் பின்புறம் உள்ள மூடக (boot)த்தில்.
- இந்த இடத்திற்கு வருவதற்கு முன்பாக அனைத்துப் பொருட்களையும் உங்களுடைய வாகனத்தின் பின் பக்கத்தில் வையுங்கள். இங்கு வந்து சேரும்பொழுது உங்களுடைய வாகனத்திற்குள்ளாகவே இருங்கள், எமது ஒப்பந்ததாரர் வந்து உங்களிடம் இருக்கும் பொருட்களை எடுத்துச் செல்வார்.

## மற்ற மீள்சுழற்சித் திட்டங்கள்

பாதுகாப்பாக அகற்றப்படுவதற்காக, **தேவைப்படாத மருந்துவகைக**ளை உங்களது உள்ளூர் மருந்துக்கடையில் திருப்பிக் கொடுங்கள்.

**'மொபைல் சேகரிப்பு' (Mobile Muster)** சேவையில் உங்களுடைய மொபைல் தொலைபேசியை மீள்சுழற்சி செய்யுங்கள். www.mobilemuster.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

**டீவீ-க்கள், கணினிகள், அல்லது அச்சு சாதனங்க**ளை மீள்சுழற்சிக்காக எங்கே விட்டுச் செல்லலாம் என்பதைக் கண்டறிய www.recyclingnearyou.com.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

வீட்டிலிருந்து இயங்கும் வர்த்தகங்கள் அவர்களது **வர்த்தகக் கழிவுக**ளை எங்கே மீள்சுழற்சி செய்யலாம் என்பதை www.businessrecycling.com.au எனும் வலைத் தளத்திலிருந்து தெரிந்துகொள்ளுங்கள்.

**பிளாஸ்ட்டிக் பைகள்** மற்றும் **இதர மென் பிளாஸ்ட்டி**க் பொட்டலத் தாள்களை பிரதானமான பேரங்காடிகளில் மீள்சுழற்சிக்காக விட்டுச் செல்லுங்கள். மேலதிக விபரங்களுக்கு www.redcycle.net.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

NSW சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் 'கழிவுகளைக் குறைப்போம், மீள்சுழற்சியை அதிகரிப்போம்' (NSW Environment Protection Authority Waste Less Recycle More) எனும் இந்தத் திட்டத்திற்கு கழிவுப்பொருட்கள் வரித்திரட்டல் மூலமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது.

EPA 2021P3382 100% மீள்சுழற்சி அடக்கக் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

## அட்டவணையிடப்பட்ட திகதிகளில் 9 மு.ப மற்றும் 3.30 பி.ப-விற்கு இடைப்பட்ட நேரத்தில் இந்த இடங்களில் ஏதாவதொன்றில் உங்களுடைய வீட்டு உபயோக இரசாயனப் பொருட்களை விட்டுச் செல்லுங்கள்.

| | |
|---|---|
| ஏற்கும் நகரவை: **Blacktown** | **ஞாயிறு 23 ஜனவரி 2022** Blacktown City Council Works Depot Station Street, Rooty Hill |
| ஏற்கும் நகரவை: **Fairfield** | **ஞாயிறு 30 ஜனவரி 2022** Fairfield Showground 443 Smithfield Road, Prairiewood |
| ஏற்கும் நகரவை: **Canterbury Bankstown** | **சனி 5 ஃபிப்ரவரி 2022** Bankstown Paceway Eldridge Road, Condell Park |
| ஏற்கும் நகரவை: **City of Sydney** | **சனி 5 ஃபிப்ரவரி 2022** Alexandra Canal Depot 67c Bourke Road, Alexandria |
| ஏற்கும் நகரவை: **Camden** | **ஞாயிறு 6 ஃபிப்ரவரி 2022** Narellan Sports Hub, நுழைவு Millwood Avenue, Narellan வழியாக |
| ஏற்கும் நகரவை: **Sutherland** | **சனி 12, ஞாயிறு 13, திங்கள் 14, செவ்வாய் 15 ஃபிப்ரவரி 2022** Bellingara Netball Centre வாகனத் தரிப்பிடம் Bellingara Road, Miranda |
| ஏற்கும் நகரவை: **Liverpool** | **ஞாயிறு 20 ஃபிப்ரவரி 2022** Liverpool City Council Operations Centre 99 Rose Street, Liverpool |
| ஏற்கும் நகரவை: **Penrith** | **சனி 12, ஞாயிறு 13 மார்ச் 2022** Jamison Park, Entry off Jamison Road South Penrith |
| ஏற்கும் நகரவை: **Georges River** | **சனி 19 மார்ச் 2022** Carlton Depot 78 Planthurst Road, Carlton Georges River -இல் வசிப்பவர்கள் மட்டும் |
| ஏற்கும் நகரவை: **Georges River** | **ஞாயிறு 20 மார்ச் 2022** Mortdale Depot 100 Roberts Road, Mortdale Georges River -இல் வசிப்பவர்கள் மட்டும் |
| ஏற்கும் நகரவை: **Ryde** | **சனி 26 மார்ச் 2022** Meadowbank Park Netball Courts வாகனத் தரிப்பிடம், Adelaide Street, Meadowbank |
| ஏற்கும் நகரவை: **Parramatta** | **ஞாயிறு 1 மே 2022** City of Parramatta Operations Centre 316 Victoria Road (behind Bunnings and McDonalds), Rydalmere |
| ஏற்கும் நகரவை: **Campbelltown** | **சனி 7, ஞாயிறு 8 மே 2022** Suez Campbelltown Service Centre 59 Junction Road, Leumeah |
| ஏற்கும் நகரவை: **Randwick** | **சனி 14 மே 2022** Clovelly Beach வாகனத் தரிப்பிடம் Clovelly Road, Clovelly -சாலையின் இறுதியில் |
| ஏற்கும் நகரவை: **Blue Mountains** | **சனி 14 மே 2022** Katoomba Waste Management Facility, 49 Woodlands Road, Katoomba |
| ஏற்கும் நகரவை: **Georges River** | **ஞாயிறு 22 மே 2022** Georges River Council Works Depot Depot Road, Mortdale |
| ஏற்கும் நகரவை: **Ku-ring-gai** | **சனி 28, ஞாயிறு 29 மே 2022** St Ives Showground Mona Vale Road, St Ives |
| ஏற்கும் நகரவை: **Inner West** | **சனி 4 ஜூன் 2022** Inner West Council Works Depot Bolton Street, St Peters வழியாக உள்-நுழையவும் |
| ஏற்கும் நகரவை: **Northern Beaches** | **சனி 25, ஞாயிறு 26 ஜூன் 2022** Mona Vale Beach car park Surfview Road, Mona Vale |

இந்த நகரவைப் பகுதியில் 'சமூக மீள்சுழற்சி மையங்கள்' உள்ளன.
வர்ணங்கள், எரிவாயுக் கலன்கள், மின்கலன்கள், எண்ணை வகைகள், ஒளிர் மின் விளக்குகள் மற்றும் புகை எச்சரிக்கை மணிகள் ஆகியவற்றை இலவசமாக ஆண்டு நெடுகிலும் விட்டுச் செல்லுங்கள்.